சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு,
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
338, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் [illegible] | வைகாசி 3 | றஜப் 1 | இதழ் 96
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 16-5-80

RECEIVED 1980-5-16 PERIODICALS DIVISION LIBRARY

அதி சிறந்த
இயந்திரமூலம்
போட்டோஸ்ரட்
பிரதிகள் செய்து
பெற்றுக்கொள்ள
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை
(புதிய கட்டிடம்
(உள்பகுதி)
யாழ்ப்பாணம்
போன்: 8265

# திங்கள் முதல் பங்கீட்டு அட்டைக்கே சீனி!

## குடும்பத்துக்கு வாரம் இரண்டு றாத்தல் உலகச்சந்தை விலை உயர்வின் எதிரொலி

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பங்கீட்டு அட்டவணையின் அடிப்படையில் மட்டுமே சீனியை தற்போதைய விலையில் விநியோகம் செய்வதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இதன்பிரகாரம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாராந்தம் 2 றாத்தல் சீனி பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும். கூட்டுறவுக் கடைகள், உத்தரவு பெற்றவியாபாரிகளிடம் இவற்றைப்பெற்றுக்கொள்ளலாம்.

சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் போன்றவை தமக்குத் தேவையான சீனியைப்பெற அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் அனுமதிபெறவேண்டும், இப்புதிய திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகிறது.

உலக சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பங்கீட்டுமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளபோதிலும் மேலதிக சீனிக்கு என்ன விலை நிர்ணயிப்பது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கு)

## சீனிவிலை உயரும்?

(கொழும்பு)

உலகச் சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சீனியின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மார்ச்மாதம் தொன் ஒன்று 523 அமெரிக்க டொலராக இருந்த சீனியின் கொள்வனவு விலை தொன் ஒன்றுக்கு 700 அமெரிக்க டொலராக தற்போது உயர்ந்துள்ளதைத் தொடர்ந்து சீனி றாத்தல் ஒன்று 5 ரூபா 90 சதமாக உயர்த்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விலை அதிகரிப்பு விரைவில் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கும் வர்த்தகர்கள் சீனியை பதுக்கிவருவதால் கொழும்பில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறு சீனியைப் பதுக்கி மோசடியில் ஈடுபடும் வர்த்தகர்களின் லைசன்ஸ் ரத்துச்செய்வது தொடர்பாக வர்த்தக அமைச்சு தீவிரமாக ஆலோசித்துவருவதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனிவிலை அதிகரிப்பு தொடர்பாக உணவு ஆணையாளர், விலைக்கட்டுப்பாட்டு ஆணையாளர் ஆகியோரிடம் கேட்டபொழுது இதுகுறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றனர். (ம-கு)

## உகண்டா ஜனாதிபதி எங்கிருக்கிறார்?

கம்பாலா, மே 15

உகண்டா ஜனாதிபதி திரு. பினேசா எங்கிருக்கின்றார் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று கம்பாலா வானொலி அறிவித்துள்ளது.

ராணுவம் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றியபோ அரசமாளிகையில் திரு பினேசா இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (கு)

## கூட்டணி நடவடிக்கைக் குழு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ள திரு. ஈழவேந்தன், கோவை மகேசன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கு கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக்குழு கூடி ஆராய இருக்கிறது.

ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிலிருந்து மூவர்கொண்ட குழுவொன்று இவ்விவகாரம் தொடர்பாக ஆராய்வதென செயற்குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

அநேகமாக இம்மாதம் 22ம் திகதி இக்குழு கூடி ஆராயும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

## ஜே. ஜ. குடியரசு தூதுவர் இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜனநாயக குடியரசின் தூதுவர் திரு. டுறாஜேமே தமது பாரியாருடன் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார். இவர்கள் இந்த இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்கள்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதுவர் டுறாஜேமே தம்பதிகளின் யாழ். விஜயம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் வருமாறு:-

இன்று நண்பகல் யாழ். "பாம் கோட்" வந்தடையும் தூதரை நட்புறவுச் சங்க நிர்வாகசபையினர் வரவேற்பார்கள். பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். நகர முதல்வரை தூதர் சந்திப்பார். 3-30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரை முனாவில் சந்திப்பார்.

மாலை 4-45 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் நாவாந்துறை சென். மேரிஸ் - யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். மாலை தூதுவரின் யாழ். விஜயத்தை கௌரவித்து, நட்புறவுச் சங்கத் தலைவர் திரு. தா. திருநாவுக்கரசு அளிக்கும் "பாம் கோட்டில்" இராப் போசன விருந்தில் கலந்துகொள்வார்.

நாளை இலங்கை எஞ்சினியரிங் தொழிலாளர் சங்கம் குருநகர் மீன்பிடி வலைத் தொழிற்சாலையினர் யாழ். வாடிவீட்டில் அளிக்கும் காலைப் போசன விருந்தில் கலந்துகொள்வார். பின்னர் யாழ். மாவட்ட அமைச்சர், யாழ் அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர் ஆகியோ

(8ம் பக்கம் பார்க்க)

## இ. காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட 18 வேட்பாளர்களில் ஐவர் போட்டியிலிருந்து விலகினர்

சென்னை, மே 15

இந்திரா காங்கிரஸ்கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 18 வேட்பாளர்களை தமிழ்நாடு பிரிவுத் தலைவர் கட்சியிலிருந்து வெளியேற்றியதையடுத்து அவர்களில் 5 பேர் போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

இன்று நடைபெற்ற கட்சியின் நிர்வாக சபைக் கூட்டத்தின் பின்னர் நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய தமிழ்நாடு பிரிவுத் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் இத்தகவலை தெரிவித்தார்.

கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிடும் கட்சி உறுப்பினர்கள் 18 பேரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியதை நிர்வாகக்குழுக்கூட்டம் ஏற்றுக்கொண்டதாகவும் திரு. சுப்பிரமணியம் கூறினார். (கு)

## மிளகாய் கொள்முதலில் இப்படியும் மோசடி?

(யாழ்ப்பாணம்)

நெற் சந்தைப்படுத்தும் திணைக்களத்தினர் செத்தல் மிளகாய் கொள்முதலில் மோசடிசெய்துவருகின்றனரா?

இதுசம்பந்தமாக பலர் யாழ். அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளதாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஒரு றாத்தல் செத்தல் மிளகாயின் விலை ரூ. 10-50 சதம் என்று நிர்ணயிக்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இப்பொழுதும் ரூ. 8-50 சதத்திற்கே மிளகாய் கொள்முதல் செய்யப்படுகின்றதாம்! நியாயம் கேட்கும் உற்பத்தியாளர்களின் மிளகாய் கொள்முதல் செய்யப்படாது திருப்பிவிடப்படுவதாக புகார் செய்யப்படுகிறது

அதேநேரத்தில் விற்பனைத் திணைக்களத்தினரும், பலர்களின் கடைகளும் கா[illegible]

(8ம் பக்கம் பார்க்க)

## ரியூட்டரி மாணவி கொலைவழக்கு: 2-வது எதிரி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்

### வாரம் இருதினங்கள் பொலிஸில் பதிவுசெய்யுமாறு நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கில் 2 வது சந்தேக நபரான பொன்சியஸ் பெர்ணாண்டோ, 2500 ரூபா பிணையில் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டார்

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் இப்பிணைமனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

2 வது சந்தேக நபரான பெர்ணாண்டோவை பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணி ஆர். கிறிசிவாயா மனுவொன்றை யாழ் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இம்மனு விசாரணை பதில் [illegible] தாக்கல் செய்வதற்கு [illegible] தரவேண்டுமென [illegible] தவணையின்போது அவகாசம் கோரியிருந்தார். நீதிபதி நேற்றுவரை அவகாசம் வழங்கி வழக்கை ஒத்திவைத்தார்.

நேற்றுக் காலை இவ்வழக்கு கூப்பிடப்பட்டது.

சட்டமா அதிபரிடமிருந்து, இவ்வழக்கு தொடர்பாக 2 வது சந்தேக நபரை பிணையில் விட தமக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை என்று யாழ். அரச சட்டத்தரணி திரு. பி. அரவிந்தனுக்கு விசேட நெறியுறுத்தல் செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளும், சமர்ப்பணம் செய்தனர். இதைத் தொடர்ந்து நீதிபதி சந்தேக நபரை 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன்கிழமையும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பதிவு செய்துகொள்ளவேண்டுமெனக் கட்டளையிட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா, சட்டத்தரணி ஆர். இறிசிவயா, சட்டத்தரணி குமிர்தம் ராஜஆரியர் ஆகியோர் ஆஜரானார்கள்.

ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு இம்மாதம் 20ம் தேதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே. எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்படவிருக்கிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுவாமிக்குரிய சாற்றுப்படிச் சாமான்கள், 3 சோடி வெள்ளிக்கை, கால், பட்டு, நகை, பதக்கம், காசமாலை, 2 மணித் திருவாசி, 2 மணி ஆசனம், ந. சுந்தரேஸ்வரசர்மா, சங்கரத்தை, குளத்தடி, வட்டுக்கோட்டையில் தொடர்பு கொள்ளவும். 5781

கிளிநொச்சி 7-ம் வாய்க்காலில் 16 ஏக்கர் நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி! 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். 5755

பிரப்பங்குளம் வீதியில் மூன்று கடைகள் உடனடியாக விற்பனைக்குண்டு. ஸ்டோர் ஆகவும் பாவிக்க உகந்தது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 3/9, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5756

### தேவை

யாழ்ப்பாணம், ரேயல் டிஸ் பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. தராதரம் மற்றும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில்வரவும். 5777

### கல்வி

ரெலிவிசன் ரேடியோ குளிரூட்டல் ஆகிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 20-5-80வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விபரம் நேரில். சிறிலங்கா ரெக்னிக்கல் இன்ஸ்ரிரியூட், (மின்சார நிலையத்திற்கு முன்பாக) 238, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5775

### நன்றி நவிலல்

இம்மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற எனது தாயாரின் மரணச் சடங்கில் நேரிலும், தந்திகள், தபால் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ந. துரைராசா, (ஓய்வுபெற்ற அதிபர், ஊரெழு கணேசவித்தியாசாலை) ஊரெழு மேற்கு. 5780

### வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி — நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் 4009-க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 24-5-80 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் "தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்

கரவெட்டி,
10-5-80. 5751

# "வில்லிசை மூலம் சமய மறுமலர்ச்சி"

## சின்னமணிக்கு 'வில்லிசைப்புலவர்' பட்டம்

(யாழ்ப்பாணம்)

வில்லிசைக் கலைஞர் கலாவிநோதன் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)க்கு "வில்லிசைப் புலவர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

உடுப்பிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார உற்சவத்தின்போது, தொடர்ந்து 9 தினங்களும் 'மகாபாரத' வரலாற்றை வில்லிசை மூலம் திரு. சின்னமணி நிகழ்த்திவந்தார். 'மகாபாரத' தொடர் வில்லிசையின் பூர்த்தி விழாவன்று, ஏற்பாட்டாளரான உடுப்பிட்டி தொழில் அதிபர் திரு. தங்கராசா பத்தர் திரு. சின்னமணிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த முன்னாள் கூட்டுறவு இலாகா அதிகாரி திரு. எஸ். தணிகாசலம் தமது உரையில்; "வில்லிசை மூலம் சமய, புராண, இதிகாச வரலாறுகளைப் படித்தவர்கள் மட்டுமல்ல சாதாரண மக்கள்கூட எளிதில் விளங்கக்கூடிய விதத்தில் பாடும் திறனை திரு. சின்னமணியிடம் கண்டோம். இயல் இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஒன்றாக்கி வரலாற்றில் வரும் பாத்திரங்களைப் பிரதிபலிக்கச் செய்தமை இவரின் முத்தமிழ் வித்தகத்துக்குச் சான்றாக உள்ளது. இலங்கையில் மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் தனது குழுவினருடன் சென்று, எமது நாட்டின் கலைத்திறனை அறியச் செய்தமை பாராட்டிற்குரியது. வில்லிசைத்துறையில் மட்டுமல்ல, நாடகத்துறையிலும் மிகவும் அனுபவம்பெற்ற இவர், வில்லிசை மூலம் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது" என்று கூறினார்.

உடுப்பிட்டி வர்த்தகர் திரு. கணபதிப்பிள்ளை, திரு. சின்னமணிக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவித்ததைத் தொடர்ந்து, திரு. தணிகாசலம் "வில்லிசைப் புலவர்" என்ற விருதை வழங்கினார். இக்குழுவில் அங்கம் வகித்தவர்களான ஹார்மோனிய வித்வான் ஆசிரியர் நா. முருகையா, மிருதங்கவித்துவான் பொன். ஆதிமானந்தர் ஆகியோரும் உடுப்பிட்டி சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினால் கௌரவிக்கப்பட்டனர். மற்றும் 'நகைச்சுவைக் கலைஞர்' திரு. இன்பராசா, 'விற்குடக் கலைஞர்' எஸ்.பாஸ்கரன், 'உடுக்கிசைக் கலைஞர்' அச்சுவேலிக்குகன் ஆகியோரும் உடுப்பிட்டிப் பொதுமக்களால் மாலைசூட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## மறைவு அஞ்சலி:

### அழகமுத்து சண்முகம்

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். கடமைப் பொறுப்புணர்ச்சி மிகுதியாக அமையப் பெற்றவர். அதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியை இங்கு கூறத்தகும். திருக்கோணமலை சீனன்வாடித் தளத்தில் இரண்டாம் உலகப்போர் சமயம் வெள்ளையர் மத்தியில் பணிபுரிய நேர்ந்த அந்நாளில் ஒரு தினம் யப்பானிய சத்துரு விமானங்கள் மின்வெட்டுப் பாய்ச்சலில் சூழ்ந்து கொண்டு குண்டு வீசி அக்கினி தாண்டவம் நடத்திக் கொண்டிருந்த அது சமயம் வேலைத் தளத்தை விட்டு மற்றெல்லோர் கூட எங்கேயும் ஓடிப்போய் விடாமல் மனமுக்கு ஒதுங்கினதுபோல் ஒரு மரத்தின் கீழ் ஒதுங்கி கண்ணெதிரே அண்மித்த வெள்ளையர் முகாம்கள் ஒன்று தப்பாமல் ஒருவர் மிஞ்சாமல் நாசமானதை சிந்தமட்டு நெஞ்சுத்துணிவுடனே பார்த்து நின்றவர். திருகோணமலை ஊர்ப்பிறந்தார் முதலாக அங்கு பெருகிப் போயிருந்த மக்கள் கூட்டம் முழுதாக இருந்த இடம் பிறந்து வளர்ந்த பூமி, அடுத்தவர் மற்றவர் என்றெல்லாம் சிறிதும் கூட எண்ணிப் பார்க்காமல் போட்டது போட்டபடி வைத்தது வைத்தபடி விட்டு கட்டிய துணியுடனே தலையில் காவந்த அவலமாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஊர்களுக்கு புகல்நாடி உயிர் தப்பினால் போதுமென்று ஓடிப்போய்விட ஆர். ஏ. எப். போர்மன் சண்முகன் ஒரு வாரத்தின் பின் இராணுவ டிரக் ஒன்றில் இரவோடிரவாக பத்திரமாக ஊர்திரும்பி வீட்டு வாயிலில் வந்திறங்கி கலங்கிக் கொண்டிருந்த தாய் மனைவி பிள்ளைகளை மட்டிலா மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். குண்டு வீச்சு அதிர்ச்சியினால் உண்டாயிருந்த நெஞ்சிடிக்கு மருந்து சாப்பிட அதன் பின் ஒரு வைத்தியரையும் நாடினார்.

திரு. அழகமுத்து சண்முகம் கந்த வரோதய ... முன்னைய மாணவராயிருந்த நாளில் கல்லூரிப் பந்தாட்டக் கோஷ்டியில் முதன்மைச் சிறப்புப் பெற்றிருந்தார். கல்விப் பயிற்சியின் பின் மலேரிய ஒழிப்பு இயக்க ஓவர்சியராகத் தென்னிலங்கையில் பல ஊர்களிலும் அதன் பின் நீர்ப்பாசனப் பகுதி சேவையில் பொலநறுவையிலும், இரண்டாம் உலகப்போர் மூண்டது முதலாக வவுனியா, திருக்கோணமலை ஆகியாம் ஊர்களில் இராணுவ விமானப்படைத் தளசேவையில் ஒரு போர்மனாகப் பல ஆண்டுகள் மேலிடத்தாருக்குப் பிரீதியாகவும் தோழமை நேசம் பூண்ட உறவினர் ஊரவர் அயலவர் எல்லோர்க்கெல்லாம் பேருபகார சிந்தையுடனும் இனிதாகப் பணி புரிந்து கடைசியாக கல்லோயா அபிவிருத்தி சேவையிலும் சிலகாலம் செயலாற்றி பின் ஓய்வு பெற்றார்.

இசையாளர் வரலாற்றில் ஆதி முதல்வராகக் கணிக்கப் பெறும்மாவிட்டபுரம் ஆதீனம் சிவபுண்ணியரின் மூன்றாவது புதல்வியான அழகமுத்துவின் இளையபுதல்வனை மாலைப் பதியில் தோற்றிய சண்முகப் குருசுவாமி என்ற மற்றொரு பெயராலும் பலரால் அழைக்கப் பெற்றார். பின்னணியில் அளவெட்டி வாசியாகி பெரிய பழனி என்புகழ் பெற்ற தவில் வித்துவான் இணுவில் பழனிவேல் அவர்களின் புதல்வியரை மணம்முடித்த வழியாக மூன்று பெண்களுக்கும் அரிதாக ஒரு புதல்வனுக்கும் தந்தையானார்.

... ஈடயப் பிரார்த்திப்போம்—

அ. செ. மு.

## சமாஜத் தலைவராக நியமனம்

(மட்டுவில்)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தலைவராக சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. ப். வாரித்தம்பி தெரிவு செய்யப்பட்டார்.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இத்தலைவர் தெரிவு நடைபெற்றது.



மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண இல்லத்து மாணவர்கள், வடபிரதேச அபிவிருத்தி வேலைகளைப் பார்த்தறியவந்த நாட்களில் அவர்களை ஆதரித்து வசதிகள் யாவும் செய்த மின்க்கை வற் தொழில் அதிபர், விருந்தாளிகளைத் தம்பனையில் வரவேற்ற காட்சியை மேலேயுள்ள படத்தில் காண்க.

# "சைவம், தமிழ் வளர ஈழத்து இளைஞர் காட்டும் ஆர்வம்"

## தமிழக பேராசிரியை மகிழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட திருக்குறள் 1980-ம் ஆண்டு இளைஞர்களும் பின்பற்றக் கூடியதொரு சிறந்த நூலாக விளங்குகின்றது. குறள் காட்டிய வழியில் நாம் செல்வோமானால் இவ்வுலகில் மனிதர்களாக பிறந்ததின் பலனை அடைந்தவர்களாவோம். ஆகவே எமது இளம் சந்ததி திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களை ... அதன்படி வாழ முற்படவேண்டும்"

இவ்வாறு தமிழக தருமையாதீனத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியை வித்துவான் திருமதி ப. நீலா பண்டத்தரிப்பு இந்து இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் பாரத்தலை ஸ்ரீ ஐயனார் ஆலய மண்டபத்தில் "நாலும் இரண்டும்" என்னும் தலைப்பகத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் பேராசிரியை திருமதி நீலா தொடர்ந்து உரையாற்றுகையில்; ஈழத்தில் சைவமும் தமிழும் நன்கு வாழவேண்டும் என்று இளைஞர் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டிருப்பது தமக்கு பெரு மகிழ்ச்சியை தருவதாகவும் அவர்களின் சீரிய பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவான் என்றும் குறிப்பிட்டார்.


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி" போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

........................................ ........................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர் பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்........................ ஒப்பம்..........

விலாசம்..............................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆத்மஞானம் என்ற ஓடத்தின்மூலம் சம்சார வாழ்க்கையாகிய சமுத்திரத்தைக் கடந்து பயமின்மையும், பரமசாந்தியையும் அமரத்துவத்தையும் அளிக்கும் ஆனந்தத்தை அடை.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

# குறுகியதூர பயணிகளுக்கு தனியான தரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வலிகாமம் பகுதிக்குச் செல்லும் பஸ் பிரயாணிகளின் கஷ்டங்களைத் தீர்க்க வடபிராந்திய போக்குவரத்துச் சபை உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர், கீரிமலை, மாதகல், இல்லாலை ஆகிய இடங்களுக்கு செல்லும் பஸ்களில் அநேகமாக ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் செல்லும்பிரயாணிகள் முதலிலேயே ஏறி பஸ் நிரம்பிவிடுவதால் சங்கானை, சுழிபுரம், காரைநகர், பண்டத்தரிப்பு, இளவாலை, கீரிமலை ஆகிய தூர இடங்களுக்குச் செல்லும்பிரயாணிகளுக்கு அந்த பஸ்களில் இடம் கிடைக்காமல் மேலும் சில மணிநேரம் காத்திருக்கவேண்டியநிலை ஏற்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் இருந்ததுபோல் மேற் குறிப்பிட்ட பாதையில் ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் வரை செல்லும்பிரயாணிகளுக்கென குறுகியதூர பஸ்சேவைகளை நடத்துவதோடு, மானிப்பாய் வரை செல்லும் பிரயாணிகளுக்கு தனியானதொரு தரிப்பிடம் அமைத்து முதலில் தூர இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளை ஏற்றியபின்னர் இடவசதிக்கேற்றவாறு குறுகிய தூரம் செல்லும் தரிப்பில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லலாம்.

முக்கியமாக யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 10 மணிக்குப் புறப்படும் இறுதி பஸ்ஸில்கூட நீண்டதூரம் செல்லும் பயணிகளை இடநெருக்கடி காரணமாக ஏற்றாது விட்டுவிட்டுச் செல்வது இப்போது இடையிடையே ஏற்படுகிறது. இதற்குக்காரணம் மானிப்பாய்வரை பல பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டும் கூட குறிப்பிட்ட சில பஸ்களிலேயே இப்பிரயாணிகள் பயணம் செய்வதேயாகும்.

மானிப்பாய்வரை செல்லும் பயணிகளுக்குதனியானதொரு தரிப்பு அமைத்துக் கொடுப்பதன் மூலம் நீண்டதூரப் பிரயாணிகளின் பயணத்தை சிரமமின்றி மேற்கொள்ள உதவுவதோடு குறுகியதூரப் பயணிகளுக்கும் உதவி செய்வதாக அமையுமென எதிர்பார்க்கிறோம்.

கே. ரமணன்

சங்கானை.

# "கூட்டணியில்
# சாதாரண உறுப்பினருக்கும் பேச்சு, கருத்து சுதந்திரமுண்டு"

## அச்சுவேலி கருத்தரங்கில் 'சிவா'

(அச்சுவேலி)

"தமிழர் விடுதலை கூட்டணி சிறந்த ஜனநாயக மரபுடன் இயங்கிவருகிறது. சாதாரண அங்கத்தவர் தொடக்கம் தலைமைப்பீடத்திலுள்ளவர் வரை பேச்சு, கருத்து வெளியிடும் சுதந்திரம் உண்டு. ஈழவேந்தன் போன்றவர்களுக்கும் அந்த உரிமை உண்டு"

அச்சுவேலியில் நடந்த தந்தை செல்வா நினைவு தின விழாவில் பேசிய கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்

திரு. பா. க. செல்வரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

"தமிழினத்தினை பிரதிநிதித்துவப் படுத்திய இரு கட்சிகளை ஒன்றாக்கியதன்மூலம் சர்வதேச சாதனையொன்றை உருவாக்கிய பெருமை அமரர் செல்வாவையேசார்ந்ததாகும். தளராத வயதிலும் அமரர் ஜி. ஜி. யின் வீடுசென்று ஒன்றுபடுத்தியமை அமரரின் வாழ்விலும் தமிழரின் வாழ்விலும் தனியானதோர் சிறப்பினைப் பெறுகின்றது.

"கூட்டணி சிறந்த ஜனநாயக மரபுகளுடன் இயங்கி வருகின்றது. இயக்கத்தின் சாதாரண அங்கத்தவர் தொடக்கம் தலைமைப் பீடத்தில் உள்ளவர் வரை பேச்சு, கருத்து வெளியிடும் சுதந்திரங்கள் உண்டு. ஈழவேந்தன் போன்றோருக்கும் அவ்வுரிமையுண்டு அவர்கள் அவ்வுரிமையினை பயன்படுத்தும் இடத்தினை பயன்படுத்தத் தவறுகின்றார்கள். இவர்களின் இச்செயல்களைக் கண்டு நாம் ஆத்திரப்படவோ கவலைப்படவோ இல்லை, பேசித் தீர்க்க இடமுண்டு. அந்த இடத்தில் பேசுங்கள், கேளுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

குமார் முயற்சி

"தமிழர் விடுதலைக் கூட்டணியைப்பிரித்து அழிக்கப் பல வழிகளிலும் முயற்சிகள் நடைபெறுகின்றன. குமார் பொன்னம்பலம் கட்சியில் ஏதோ பலவீனம் இருப்பதாகக் கருதி பிரிக்க முயற்சி செய்கின்றார் குமார் பொன்னம்பலம் தமிழ் இளைஞர்கள் சுடப்பட்டபோது எங்கே சென்றிருந்தார். தமிழினத்திற்கு எந்தவித நன்மையும் அளியாத அரசியலமைப் புக்களை கொண்டு வரப்பட்ட போதெல்லாம் குமார் பொன்னம்பலம் எங்கே? குமார் ஒரு புறம் இருக்க இடதுசாரிகளும் தாங்களும் தமிழீழம் என்றும் சுயநிர்ணய உரிமை என்றும் குரலெழுப்பி வருகின்றார்கள்" என்றார். [நெ-நி]



இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் (1939 — 1945) பேர்லின் நகரில் வெற்றிக்கொடி பறக்க விடப்படுவதையும், யுத்த வீரர்கள் அதனை அவதானிப்பதையும் இங்கு காணலாம்.

# 2-வது மகாயுத்தம் முடிந்து 35 ஆண்டுகளாகின்றன

இரண்டாவது உலக யுத்தத்தில் நாசிஸம் தோற்கடிக்கப்பட்டு 1980 மே 9-ந் திகதியுடன் 35 ஆண்டுகள் மறைந்துவிட்டன

மூன்றரை தசாப்தங்கள் என்பது கணிசமானதொரு காலப்பகுதியாகும் 2-வது உலக யுத்தத்தின் சிக்கல்மிக்க வரலாற்று விளைவுகளை குறித்து ஆழ்ந்து சிந்திப்பதற்கு இக்காலகட்டம் போதுமானது

இந்த யுத்தம் மனிதகுலத்துக்கு அளித்த ஏராளமான படிப்பினைகளில் பிரதானமானது 3-வது உலகயுத்தம் ஒன்று இருக்கக்கூடாது என்பதுதான். அப்படி ஒன்று ஏற்படுமாயின் நவீன நாகரீகம் பூண்டோடு பொசுக்கப்பட்டுவிடும்.

இன்று உலகின் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உலகில் ஆங்காங்கே யுத்த ஆதரவுச் சக்திகள் தலையெடுத்து வரும் ஒரு சூழலில் சமாதானத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், மனித குலத்தை அழிவின் விளிம்புக்கு இட்டுச் சென்ற பாசிஸ ஆக்கிரமிப்பாளரை நிபந்தனையற்ற சரணடையச் செய்த 35 வது ஆண்டு பூர்த்தியை இன்றைய தலைமுறை அனுஷ்டித்துக்கொண்டிருக்கிறது.

உலகின் ஆக்கிரமிப்பு வெறிபிடித்த மேலாதிக்க சக்திகளது "பலவான் நிலைக் கொள்கை" — வெறித்தனமான அதிசூரத்தனங்களின் இவற்றின் வங்குரோத்து நிலையை நம்பிக்கையற்ற தன்மையை அறிவுணர்வற்ற நிலையைத் தான் 2-வது உலக யுத்தமும் அதன் விளைவுகளும் காட்டுகின்றன.

ஹிட்லர் கும்பலுக்கேற்பட்ட முடிவு அனைவருக்கும் நல்லதொரு பாடம் [illegible] ஏதாவது [illegible] [illegible] பலத்தால் இதர நாடுகளை

8-30 – 10-00 மணி வரை திரு. ஏ. கே. கருணாகரன் பாட்டு, திரு. வி [illegible] சாமி வயலின், திரு [illegible] தானகிருஷ்ணன் [illegible] (தொ)

# அமிர் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச்சங்கம் யாழ் கிளை நடத்தும் பாசிசத்தை எதிர்த்து வெற்றி கொண்ட 35-வது ஆண்டு விழா நாளை மாலை யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறுகிறது

ஜேர்மன் ஜனநாயகக்குடியரசுத் தூதுவர் புறோமே தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்.

......

# "இன்றைய தமிழர் நிலை"

(யாழ்ப்பாணம்)

"இன்றைய தமிழர் நிலை" என்ற தலைப்பில், தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம், தமிழ்க் காங்கிரஸ் தலைமைச் செயலகத்தில் இன்று மாலை நடக்கும் கருத்தரங்கில் உரை நிகழ்த்துவார்.

# கந்தபுராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி கயற்றசிட்டி அருள்மிகு கந்தசாமி கோவில் உற்சவத்தை யொட்டி, கடந்த மாதம் 19-ம் திகதி ஆரம்பமான கந்தபுராணப்படிப்பு அடுத்தமாதம் 16-ம் திகதி பூர்த்தியாகும். (க)

# வருடாந்த உற்சவம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது

இம்மாதம் 29 திகதி தேர்த் திருவிழாவும் 30ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (து)

ஆக்கிரமிப்பு மூலம் ஏற்படக்கூடிய முடிவையே காட்டுகின்றது நாஜிகளது ஆக்கிரமிப்பு மனிதகுலத்துக்கு

[5ம் பக்கம் பார்க்க]

# நாடும் நடப்பும்

மானிப்பாய் எம். பி. தர்மலிங்கத்துக்குச் சுகமில்லை. கடுமையான காய்ச்சல் இடைவிடாது காய்ச்சல் விடுகிறது. குளிருடன் காய்ச்சல் தடீரென்று வருகிறது மலேரியாக் காய்ச்சலாக இருக்குமோவென்று அவருக்குச் சந்தேகம். "செங்கமாரிக்கும் இப்படிக் குளிர் காய்ச்சல் வருவதுண்டு" என்று அனுபவத்தில் தெரிந்ததை அவரிடம் கூறினேன். இக்கடுப்பெயிலுக்குச் செங்கமாரி நோய் பல இடங்களிலும் காணப்படுகிறது என்றும் சொன்னேன்.

"நீங்கள் ஒரு டாக்டரிடமும் காட்டவில்லையோ?" என்றும் கேட்டேன்.

"நல்லதொரு டாக்டர்தான் எனக்கு வைத்தியம் செய்யத் தொடங்கினார். பாவம் அவர் துரியகுறையில் வழுக்கிவிழுந்து காலை முறித்துக் கொண்டார். நான் இப்போ வேறு ஒரு வைத்தியரிடம் போகப்போகிறேன்" என்றார் தர்மர்.

"கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் பிரச்சனைகள் தோன்றினாலும் அரசியல் தலைவர்களுக்கு நோய்வரும். இதுவும் அரசியல் காய்ச்சலோ?" என்று கேட்டேன்.

அந்தக் காய்ச்சலோடும் கேள்விக்கேட்டதால் சிரிப்பை உதிர்த்த தர்மர், "இந்தத் தலைவர்களுக்கு அப்படியான அரசியல் காய்ச்சல்கள் வரமாட்டாது" என்று கூறினார்.

0 0 0

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாகத் தமது கருத்துவேறுபாடுகளை வெளியே கூறிவருவது இதர அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்பு?

சில வருடங்களுக்கு முன்பு மட்டக்களப்பில் நடந்த ஒரு வைபவத்தில் பத்திரிகை நண்பரொருவருடன் நானும் நின்றேன். அப்பொழுது அங்கிருந்த சிலர் வழமைபோல் பத்திரிகைகள் மீது குறை கூறினர் என்னுடனிருந்த பத்திரிகை நண்பரை ஒருவர் குறிப்பிட்டு "அவர் முன்னரெல்லாம் அசல் கூட்டணி. இப்போது தான் அங்கேயும் இங்கேயுமாய்ச் சிதறிப் போயிருக்கிறார்" என்றார்.

திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு 'துண்டு துண்டாகச் சிதறி ஒன்றாக இடப்பதுதான் கூட்டணி முழுசாகஇருந்தால் தான் (நண்பரின் பெயரைச் சொல்லி) இலவேலைகளின் கஷ்டம்" என்றார்

0 0 0

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் பகுதியைப் புனித இடமாகப் பிரகடனப் படுத்த வேண்டுமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனாலும் அதைப் புனித இடமாக வைத்திருப்பதில் ஆலய நிர்வாகம், மாநகரசபை, மற்றும் பொதுமக்களும் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆறுமுகசாமி வாசல் வழியாகப் போக்குவரத்துக்கு இருந்துவந்த வீதியை மூடி கேணிக்குப் பின் புறமாகப் புதிய வீதி திறந்து பருத்தித்துறை வீதியுடன் இணைக்கப் பட்டது.

இந்தக் கேணிக்குப் பின்புறமுள்ள வீதியில் வெளிச்சம் குறைவு. இரவு நேரங்களில் அங்கு விஷமிகளின் வாலாட்டம் அதிகரித்துவருகிறதென்று பலரும் புகார் செய்கிறார்கள். புனிதமான கோயில் பகுதியில்தான் இரவு நேரங்களில் விஷமிகளுக்கு நல்லவாய்ப்பு! ஆலய நிர்வாகமும் பொலிஸ் பகுதியினரும் இவ் விஷயத்தில் சிறிது கவனம் செலுத்துவது பல விதத்திலும் நல்லது!

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இசைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் ரசிக ரஞ்சன சபாவின் 29 வது ஆண்டு இசை விழாவின் 8ம் நாளான இன்றுவெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு;

மாலை 6-45—8-15 மணி வரை திரு. கே. வி. நம்பு பாட்டு, திரு. கே. சித்திவிநாயகம் வயலின், திரு. ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கம்.

8-15—8-30 மணி வரை தலைமையுரை திரு சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள்.

# "மனித குலத்தைச் சீர்திருத்த விஞ்ஞான ரீதியான புதியமதம் உருவாக வேண்டும்"

## கருத்தரங்கில் பேராசிரியர் கருத்து

(புலோலி உடு பிட்டி நிருபர்)

"சமயங்களிலுள்ள மூட நம்பிக்கைகளையும், குறைகளையும் அகற்றி விஞ்ஞான ரீதியிலான புதிய மதத்தை உருவாக்கி அதன்மூலம் மனித குலத்தைச் சீர்திருத்தி அமைக்க முடியும்".

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் பருத்தித்துறை வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற "விஞ்ஞானமும் சமயமும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார் பேராசிரியர் கணேசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மனிதனைப் பண்படுத்துவதில் சமயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மத நம்பிக்கைகளே மனிதகுலத்தை வாழ்விக்கின்றது சாதாரண பிரஜை ஒருவன் கூட, விஞ்ஞானக் கண்கொண்டுதான் சமயத்தை நோக்குகின்றான். மனிதவாழ்க்கையோடு இன்று விஞ்ஞானம் வெகுவாக ஒன்றிணைந்து விட்டது.

"மறு பிறவி என்று சமயங்களில் கூறப்படுவதை இன்றைய விஞ்ஞான யுகத்தில் நம்பக்கூடியதாக இல்லை. சொர்க்கம், நரகம் என்பதும் மூட நம்பிக்கைகளேயாகும். மனிதனைச் சன்மார்க்கப் பாதையில் இட்டுச் செல்லும் மதங்களில் கூட சில மூட நம்பிக்கைகள் புதைந்து கிடக்கின்றன. மூட நம்பிக்கையுள்ள இடங்களில் ஒருபோதும் விஞ்ஞானத்தைப் புகுத்த முடியாது.

"புதையலைப் பெறுவதற்காகப் பலி கொடுத்தல், பேய், பிசாசு என்பவற்றிற்கு விஞ்ஞானத்தில் இடமேயில்லை. மீதேன் என்ற வாயு இரவு வேளைகளில் நெருப்பாக எரியும்போது அதை கொள்ளிவாய்ப்பிசாசு என்று கூறினால் அதை விஞ்ஞான ரீதியில் ஆராயப்போனால் பேய் என்பதே இடையாது என்றே கூறலாம்.

"கடவுளுக்கு நேர்த்திக்கடன் கொடுத்தல் போன்றன கைக்கூலி கொடுப்பதைப் போன்றதாகும். கடவுளுக்கு லஞ்சம் கொடுக்க முனையக்கூடாது கடவுளை மனிதனின் நிலைக்குத் தள்ளக்கூடாது.

"சமயங்கள் உலகில் இதுவரை எதைச் சாதித்திருக்கின்றன? ஒரு மதக் கோட்பாட்டில் ஒரு கன்னத்தில் அடி விழுந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு என்று சொல்லப்பட்டுள்ளது. இது நடைமுறையில் நடக்கக்கூடியது ஒன்றல்ல உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் நம்மில் எவராவது எமது அயலானைப்பார்த்து மூன்று வேளையும் தவறாமல் சாப்பிட்டுவிட்டாயா என்றாவது கேட்டிருக்கிறோமா.

"சமயங்களில் அன்பே பிரதானமாகப் போதிக்கப்படுகின்றது. இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் முக்கிய முஸ்லிம் நாடுகளில் ஒன்றான ஈரானில் என்ன நடக்கின்றது? பணயக் கைதிகளை வைத்துப் பேரம் பேசுகின்றார்கள். இது அயலவனையும் நேசி என்ற மதக்கோட்பாடு நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதையே நிரூபித்துள்ளது.

"பாகிஸ்தானை உருவாக்கிய பூட்டோ தூக்கிலிடப்பட்டார். பங்களாதேசத்தை உருவாக்கிய முஜிபுர் ரஹ்மான் குடும்பம் அடியோடு அழிக்கப்பட்டது இந்தச்சந்தர்ப்பங்களில் மதங்கள் என்ன செய்து கொண்டிருந்தன?" என்று கேட்டார்.

## சட்டவிரோத தராசுப்படிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் "சீல்" வைக்கப்படாத சட்டவிரோதமான தராசுப் படிகளை வைத்திருந்த பல வியாபாரிகள் நேற்று முன்தினம் திடீரென அங்கு பரிசோதனை நடத்திய யாழ். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் மாட்டிக்கொண்டனர்

இவர்கள்மீது விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது

## சனசமூகநிலைய கருத்தரங்கு

(மட்டுவில்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூகநிலையங்கள் சேர்ந்த கருத்தரங்கொன்று இம்மாதம் 25ம் திகதி சாவகச்சேரியில் நடைபெறும்.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் தேசிய இளைஞர் மன்ற அதிகாரி திரு கே. நீலகண்டன், சர்வோதய இயக்கத் தலைவர் திரு கே திருநாவுக்கரசு யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வி கிருஷ்ணசாமி, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி நகரபிதா திரு எஸ் கே நடேசப்பிள்ளை இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார் சாவகச்சேரி எம். பி. திரு வி. என் நவரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

## ரூ. 22,000 பெறுமதியான விஸ்கிபோத்தல் கடத்தல்: எதிரிக்கு ரூ 5000 அபராதம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற கப்பலிலிருந்து விஸ்கி போத்தல்களை கடத்தியது தொடர்பாக தேடப்பட்டு சரண்புகுந்த நபருக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு 'விஸ்கி' போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டன,

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற மாவுக் கப்பலான செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த "ஏப்ரல் சமாஜிவிக்" என்னும் கப்பலிலிருந்து கடத்திவரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் 22 ஆயிரம்ரூபா பெறுமதியான 19 கேஸ் விஸ்கிப் போத்தல்கள் காங்கேசன்துறை ஐயனார் கோவிலடிச் சுடலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்து காங்கேசன்துறைசுங்கஇலாகாவினரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக தேடப்பட்ட காங்கேசன் துறையைச் சேர்ந்த எஸ் சித்திரவேல் என்னும் நபர் சுங்க அதிகாரிகளிடம் சரண் புகுந்தபோது அவர் யாழ். உதவி சுங்க சேகரிப்பாளர் திரு.செல்வரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவருக்கு 5000ரூ. அபராதம் விதிக்கப்பட்டு விஸ்கி போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

# கொலைவழக்கு விசாரணையில் எழுந்த சட்டப்பிரச்னைகள்

## ஜூன் 3-க்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை மயானக் கொலை வழக்கில் சாட்சியமளித்த சாட்சிகள் இருவரை சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குறுக்குவிசாரணை செய்யப்போவதாக் கூறியதையடுத்து எழுந்த சட்டப்பிரச்னையால் சாட்சிகளை இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணை செய்யலாமா? முடியாதா? என்பதை ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவதை ஜூன் 3ம் திகதிக்கு மல்லாகம் நீதிபதி ஒத்திவைத்தார்.

எதிர்தரப்பு சட்டத்தரணிகளது ஆட்சேபத்தின் பேரில் இன்ஸ்பெக்டரை நீதிமன்ற விசாரணைகளில் பங்குபற்ற வேண்டாமெனவும், சாட்சிமாரில் போய் இருக்குமாறும் நீதிபதி பணித்தார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் தெல்லிப்பழையையடுத்த மயானமொன்றில் ஏழாலையைச் சேர்ந்த கந்தையா இல்லையம்பலம் என்பவர் கொலையுண்டு கிடந்தது தொடர்பாக மல்லாகத்தைச் சேர்ந்த மாதன் மகாலிங்கம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபொழுதே இவை இடம் பெற்றன.

இவ்வழக்கில் தெல்லிப்பழையைச் சேர்ந்த 21 வயதுடைய வேலாயுதம் இந்திராணி என்ற இளம் பெண் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவதினம் நானும் எனது தாயார் ஆனந்தம்மாவும் வீட்டிலிருந்தோம். கொலையுண்டவரது சடலம் கிடந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் எமது வீடு உள்ளது. நடு இரவுபோல் ஆடு கத்தும் சத்தம் கேட்டது. எழுந்து லாம்புடன் சென்று பார்த்தபோது ஆட்டைக்காணவில்லை. பின்னர் ஆடு திரும்பி வந்தது. பின்னர் நாங்கள் படுத்துவிட்டோம்" என்றார்.

இச்சமயத்தில், சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சுகுணேந்திரன் சாட்சியை தாம் குறுக்கு விசாரணை செய்யப் போவதாக நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

பொலிசாருக்களித்த வாக்குமூலத்தில் இந்த சாட்சி பல விபரங்களை தெரிவித்திருந்ததாகவும், இங்கு அவற்றைத் தெரிவிக்காமையால் தாம் குறுக்கு விசாரணை செய்வது அவசியமாக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இதனை ஆட்சேபித்து சட்டப்பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

கொலை வழக்கு ஒன்றில் வழக்காளி தரப்பில் நீதிபதியே விசாரணையை நடத்த முடியுமெனவும் பொலிசாரோ சட்டத்தரணிகளோ வழக்கை நடத்த முடியாதெனவும், வேண்டுமானால் நீதிபதி இவர்களது உதவியை மட்டுமே பெறமுடியுமெனவும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய சட்டத்தரணி செல்வரத்தினம்; இன்ஸ்பெக்டர் இக் கொலை வழக்கினை நடத்தவோ சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவோ முடியாது என்று வாதிட்டார்.

இதனையடுத்து இது பற்றி ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவதை ஜூன் மாதம் 3-ம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்தார்.

இக் கூட்டத்தில் மேற்படி தீர்ப்பு வழங்கப்படும்வரை வழக்கின் விசாரணையை இடைநிறுத்தி வைக்கவேண்டுமென இன்ஸ்பெக்டர் சுகுணேந்திரன் நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

இச்சமயத்தில் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்டரின் மீதுக்கு பயமானவையென்றும் இன்று அவர்களை விசாரணை செய்யாது விட்டால் பொலிசார் அவர்களை பயமுறுத்தி பின்னர் வேறு விதமாகச் சாட்சியமளிக்க செய்துவிடுவார்களென்றும் ஏற்கனவே இவ்வாறு பொலிசார் அவர்களைப் பயமுறுத்தி வாக்குமூலங்களை பெற்றுள்ளாரெனவும் நீதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இன்ஸ்பெக்டர் சுகுணேந்திரன் இவ்வழக்கில் ஒரு சாட்சியாகவும் இருப்பதால் அவர் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை செய்யப்படும்போது இருக்க முடியாதெனவும் அவர் சாட்சிமாலுக்குச் செல்வதே முறையெனவும் கூறினார்.

இதனையடுத்து இன்ஸ்பெக்டரை சாட்சி மாலுக்குச் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிபதி விசாரணையைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

அடுத்து கொலையானவரின் தம்பி வேலாயுதம் அமிர்தலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

வேலாயுதம் அமிர்தலிங்கம் சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினத்தால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபின் மேல் விசாரணையை நீதிபதி ஜூன் 3ம் திகதிக்கு ஒத்திவைத்தார்

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு சார்ஜன்ட் வேலாயுதம் ஆகியோரும் எதிர்தரப்பில் சட்டத்தரணிகள் செல்வி கமலா சிங்கையர், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி ... பத்திரிகையுடன் ஆஜரானார்.

## வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் சமத்துவ வழிபாடு

(மட்டுவில்)

கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சமத்துவவழிபாடுகளுடன், இந்த ஆண்டு வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. சகல மக்களும் தேர்வடம் பிடித்து விநாயகப்பெருமானின் தேரும் அமைதியாகப் பவனிவந்தது.

கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த ஆண்டு வருடாந்த உற்சவத்தின் போது, சிறுபான்மைத் தமிழர் மனிதாபிமான வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு சிறுபான்மைத் தமிழர் விநாயகப் பெருமானின் தேர்வடம் தொட எதிர்ப்புத்தெரிவிக்கப்பட்டதையும் இதைத்தொடர்ந்து சிறுபான்மைத் தமிழரின் மனிதாபிமான ஆலய வழிபாட்டு உரிமை கொடுக்க வேண்டுமெனக் கோரி தமிழ் மக்கள் சத்தியாக்கிரகம் நடத்தியதும் "ஈழநாடு" வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்படியான அசம்பாவிதங்கள் எதுவும் இந்த ஆண்டு இடம்பெறுவதைத் தவிர்க்க ஆலய நிர்வாகிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

சிறுபான்மைத்தமிழர் உட்பட சகலரும் ஆசாரசீலர்களாக ஆலய உற்சவங்களில் சமத்துவவழிபாடு நடத்தினர். தேர்த்திருவிழாவின்போது ஏற்றத்தாழ்வின்றி சகலரும் தேர்வடம் தொட்டு இழுத்தனர்.

## இன்று திறக்கப்படும் 4 உப அஞ்சல் நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணத்தில் 4 இடங்களில் உப அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு பி விஜயக்கோன், இந்த உபதபால் நிலையங்களை திறந்துவைப்பார்.

இன்றுகாலை 8-15 மணிக்கு நல்லூர்த் தொகுதியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், 10-30 மணிக்கு யாழ்ப்பாணத் தொகுதியிலுள்ள ஈச்சமோட்டையிலும் பிற்பகல் 3-30 மணிக்கு காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள ...தையிட்டியிலும், மாலை 5-30 மணிக்கு உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கரணவாய்த் தெற்கிலும் புதிய உபஅஞ்சல் நிலையங்களை யாழ் மாவட்ட அமைச்சர் திறந்துவைப்பார்.

இத்திறப்புவிழா வைபவங்களில் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ் மாவட்ட அமைச்சரின் இணைப்புச் செயலாளர் திரு எஸ் பஞ்சலிங்கம், மாவட்ட அமைச்சின் பத்திரிகைச் செயலாளர் திரு. இ கதிரவேலு, யாழ். தபால்பகுதி உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (கொ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

✤ஹிந்திமொழி பற்றிய உறுதிமொழி

# வாயளவில் மட்டும் போதாது; சட்டம்வேண்டும் - எம். ஜி. ஆர்.

சேலம், மே. 15

**ஹிந்திமொழி பேசாத மக்கள் மீது அம்மொழி திணிக்கப்படமாட்டாது என்று வாயளவில் கூறிவிட்டால் மட்டும்போதாது. இந்தஉறுதி மொழிக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் சட்டம் இயற்றப்படவேண்டும்.**

இவ்வாறு அ.தி.மு.க. தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் சேலம் நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

எந்தச் சூழ்நிலையிலும் ஹிந்தித்திணிப்பு இல்லை என்று கூறும் திருமதி இந்திராகாந்தி தமது உறுதிமொழிக்கு சட்டப்பாதுகாப்பு அளிக்க முன்வருவாரா? என்றும் திரு ராமச்சந்திரன் கேட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தி.மு.க. அரசு மத்திய மந்திரிசபை முன்பு தி.மு.க. அரசு ஊழல் புகார் மீதே கலைத்தது. அ.தி.மு.க. அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளது. எமது அரசின்மீது ஏதாவது புகார் கூற முடியுமா?

இரு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் ஹரிஜனர்கள் மரணமடைந்தது குறித்து திருமதி காந்தி இன்று கவலைப்படுகிறார். அவரதுமாநிலமான உத்தரப்பிரதேசத்தில் ஹரிஜனர்கள் கொலை செய்யப்பட்டதற்கு என்ன கூறுகிறார். (இ)

---

## "தமிழக அரசு கலைப்பு நியாயமானதே"
### புதுச்சேரி முதல்வர் கருத்து

புதுச்சேரி, மே 15

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசை மத்திய அரசு கலைத்தது நியாயமே என்று புதுச்சேரி முதல்வர் திரு டி. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:- கடந்த லோகசபைத் தேர்தல் முடிவுற்றதும் திரு எம். ஜி. இராமச்சந்திரன் முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தால் தமிழக அரசு கலைக்கப்பட்டிருக்க மாட்டாது. தி.மு.க. அரசு ஆட்சி பிடித்திருந்த போது மேற்கொண்ட நல்லபல திட்டங்களை எல்லாம் அ.தி.மு.க. அரசு பாழ்படுத்திவிட்டது.

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி அரசினால் எவ்வாறு திறம்பட ஆட்சிநடத்த முடியும் என்று திரு. எம். ஜி. ஆர். கூறிவருகிறார். புதுச்சேரியில் அதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக இருக்கிறது புதுச்சேரியில் கூட்டணி அரசு நல்ல அரசை நடத்தவில்லையா? (இ)

---

## "மாநில அரசுகள் புறக்கணிக்கப்படுகின்றன"
### மத்திய அரசுமீது இந்தியகம்யூ. தாக்கு

சென்னை, மே.15

மாநில அரசுகளை மத்திய அரசு உதாசீனம் செய்து அவை அதிகாரமற்ற நிலைக்குத்தள்ளப்படுகின்றன. இந்நிலையில் மாநிலங்களின் உரிமைகளுக்காகவும் மக்களின் உரிமைகளுக்காகவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அயராது உழைக்கும் என்று உறுதியுடன் கூறுகிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் தமிழ் நாட்டுக்கிளை வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ் நாட்டின் நாலரைக் கோடி மக்களும் இன்று வறுமையால் வாடுகின்றனர். இந்திய மாநிலங்களில் வறுமையால்வாடும் மாநிலங்களில் அது 3 வது இடத்தை வகிக்கிறது இவற்றுக்கெதிராக போராட்டம் நடத்த இந்திய கம்யூனிஸ்ட் என்றுமே தயாராக இருக்கிறது என்றும் அத்தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

## ஒபோட்டோ உகண்டா திரும்ப வேண்டும்
### புதிய ஆட்சியாளர் விருப்பம்

கம்பாலா, மே 15

உகண்டாவின் முன்னாள் பிரதமர் திரு மில்டன் ஒபோட்டோ நாடு திரும்பி உகண்டா அரசியலில் மீண்டும் ஈடுபடவேண்டும் என்று புதிய இராணுவ ஆட்சியாளர்கள் விரும்பம் தெரிவித்துள்ளனர் என உகண்டா வானொலி தெரிவித்துள்ளது.

1966ம் ஆண்டு முதல் 1971ம் ஆண்டுவரை பிரதமராக இருந்த திரு. ஒபோட்டோ 1971ம் ஆண்டு ஜெனரல் இடிஅமினின் ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து நாட்டைவிட்டு தப்பிஓடி தன்ஸானியாவில் தஞ்சம்புகுந்தார்.

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் தற்போது அமைதி நிலவுவதாகவும் அரசாங்க கட்டிடங்களை அரசாங்க படையினர் காவல் புரிந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இராணுவ ஆணைக்குழுவினர் தற்போது அரசியல் கட்சிகளின் ஆதரவைக் கோரி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

## இ. காங்கிரஸில் வெளியேற்றம்

சென்னை, மே.15

தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸின் அதிகார பூர்வமான வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிடும் 18 பேர் இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

திருநெல்வேலி [illegible] கமிட்டியும் கலைக்கப்[illegible] (இ)

---

சங்குவேலி கொலை:

## சரணடைந்த நால்வருக்கும் றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

சங்குவேலியில் நபரொருவர் வாளால் வெட்டப்பட்டும், தாக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக பொலிஸில்சரண்புகுந்தநபரும், நீதிமன்றத்தில் சரண் புகுந்த மூவரும், மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

சங்குவேலியைச் சேர்ந்த அருளம்பலம் தர்மலிங்கம் என்பவரது தோட்டத்தினுள் அவ்விடத்தைச் சேர்ந்த மு. நடராசா என்பவருக்குச் சொந்தமான மாடு மேய்ந்துவிட்டதையடுத்து ஏற்பட்டவாக்குவாதம் கைகலப்பாக மாறி மேற்படி அருளம்பலம் தர்மலிங்கம் என்பவர் வாளால் வெட்டப்பட்டும், பொல்லால் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டதாக இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது.

இது தொடர்பாக சுன்னாகப் பொலிசாரால் தேடப்பட்ட மு. நடராசா என்பவர் பொலிஸில் சரண்புகுந்தார். மேலும் பொலிசாரால் தேடப்பட்ட கந்தையா ரவீந்திரன், கந்தையா பத்மநாதன், கணபதிப்பிள்ளை சிவலிங்கம் ஆகியோர் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் புகுந்தனர். நீதிபதி திரு. சி ஆர். இராஜசிங்கம் சந்தேகநபர்கள் நால்வரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்

---

யாழ். செயலக கலாச்சார மன்ற

## பாரதிவிழா இறுதிப் பேச்சுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் நடத்தும் வள்ளுவர் விழாவை யொட்டிய பேச்சுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும்.

இரண்டு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் மேற்பிரிவுக்கு போட்டி நடுவர்களாக டாக்டர் எஸ். சண்முகதாஸ், திரு லோகேஸ்வரன், திரு. மௌனகுரு ஆகியோரும் கீழ்பிரிவு நடுவர்களாக செல்வி கணேசானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், விரிவுரையாளர் நுஃமான் ஆகியோரும் கடமையாற்றுவார்கள்.

இருபிரிவுகளிலும் மூவருக்கு பரிசுகள் வழங்கப்படும். இப்பரிசுகள் இம்மாதம் 24-ந் திகதி நடைபெறும் வள்ளுவர் விழாவில் அளிக்கப்படும்.

---

### 2வது...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

5 கோடி மக்களது இழப்பை ஏற்படுத்தியது. அளப்பரிய துன்ப துயரங்களையும் பொருளாயத நஷ்டங்களையும் ஏற்படுத்தியது.

ஆழ்ந்த அரசியல் அறிவின் பேன்மையும், சோதனையும் தான் இறுதியில் வெற்றியடையும் என்பதை ஆபாயகரமான கொள்கையைப் பின்பற்றும் மேலை நிக்கச் சக்திகளுக்கு 2-வது உலக யுத்தத்தின் முடிவு உணர்த்துகிறது.

- 'அவதானி'

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானக் கல்வி வட்டம் ஏற்பாடு செய்துள்ள "பணவீக்கம்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறுகிறது.

திரு. கே. சிறீதரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் "பணவீக்கத்தின் தோற்றமும் தாக்கமும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. பி சிவநாதன் பேசுவார். அவரைத் தொடர்ந்து "இலங்கையில் பணவீக்கத்தின் இன்றைய நிலையும் தீர்வுக்கான வழிவகைகளும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு மு நித்தியானந்தன் உரையாற்றுவார்

---

## உலகவங்கியில் சீன அங்கத்துவம்

ஹொங்கொங், மே. 15

சர்வதேச நாணயநிதியத்தில் சீனா அங்கத்துவம் பெற்றுள்ளது.

கைத்தொழில்-ராணுவபலத்தைக் கட்டிவளர்க்க, சீனாவுக்கு அந்நிய செலாவணி அவசரமாகத் தேவைப் படுவதாலேயே உலகவங்கியில் அங்கத்துவம் பெற்றுள்ளது. இந்த அந்நிய நிதி எந்தெந்தத்துறையில் முதலீடு செய்யப்படுமென்றுஉடன் அறிவிக்கப்படவில்லை. இடைக்கப் போகும் நீண்டகால கடனில் கணிசமானபகுதி ராணுவத்துக்கே செலவிடப்படலாம் [illegible] நிதியத்திலும், உலக வங்கியிலும் சீனா பிரவேசிக்கும் என்பது சில காலமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் இந்த சர்வதேச நிதிஸ்தாபனங்களின் சீனாவுக்கு வசதிகள் கிடைக்கப் போவது மூன்றும் உலக வளர்முக நாடுகளை பாதிக்கலாம் என்று வர்த்தக வட்டாரங்கள் கருதுகின்றன.

வளர்முகநாடுகளின்தொழில் நுட்பத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் இதனால் பாதிக்கப்படலாம் சீனா தான் ஒரு வளர்முகநாடு என்ற அடிப்படையிலேயே கடன்களைப் பெறும்.

---

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கடந்த 13-ந் திகதி இழுக்கப் பட்ட 779-வது இலங்கை சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**31 C 0040**
ரூபா 100,000

இரண்டாவது பரிசு
**10 V 0123**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**33 O 0021**
ரூபா 10,000

தலா ரூபா 1,635-27 சதம் ஆறுதல் பரிசுகளை பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 10 B 0230 | 10 B 0693 |
| 26 B 0364 | 23 B 0990 |
| 33 B 0741 | 04 C 0056 |
| 06 C 0739 | 08 C 0425 |
| 11 C 0887 | 15 C 0818 |
| 33 C 0438 | 02 D 0 55 |
| 04 D 0[illegible]70 | 27 D 0325 |
| 27 D 0642 | 03 E 0062 |
| 13 E 0524 | 13 E 0858 |
| 13 E 0892 | 14 E 0161 |
| 27 F 0012 | 27 F 0605 |
| 22 G 0647 | 01 H 0495 |
| 12 H 06 9 | 14 H 0328 |
| 25 H 0648 | 19 J 0512 |
| 20 J 0852 | 32 J 0956 |
| 09 K 0341 | 14 K 0217 |
| 23 K 05 0 | 15 K 0[illegible]27 |
| 02 L 0140 | 02 L 0519 |
| 03 L 0532 | 15 L 07[illegible]2 |
| 17 L 0144 | 21 L 0433 |
| 02 M 0620 | 07 M 0526 |
| [illegible]4 M 0 40 | 16 M 0702 |
| 02 N 0989 | 04 N 0753 |
| 04 N 0839 | 08 N 0060 |
| 10 N 08[illegible]3 | 26 N 0644 |
| 31 N 0762 | 33 N 0564 |
| 05 O 0204 | 20 O 0751 |
| 07 P 0134 | 16 P 0656 |
| 14 P 0766 | 02 Q 0416 |
| 13 Q 0364 | 18 Q 0386 |
| 17 Q 0450 | 23 Q 0797 |
| 30 Q 0938 | 31 Q 0766 |
| 11 R 0377 | 04 S 0304 |
| 04 S 0322 | 06 S 0685 |
| 07 S 0036 | 07 S 057[illegible] |
| 15 S 0303 | 18 S 0496 |
| 28 S 0554 | 04 T 0[illegible]58 |
| 12 T 07 7 | 18 T 0 16 |
| 33 T 0203 | 13 U 0597 |
| 30 U 0728 | 03 V 0876 |
| 04 V 0131 | 24 V 0[illegible]42 |
| 26 V 0053 | 30 V 0947 |
| 15 W 0089 | 19 W 0696 |
| 20 W 0978 | 03 X 0859 |
| 05 X 0[illegible]85 | 11 X 00 8 |
| 11 X 0613 | 01 Y 0402 |
| 04 Y 0658 | 04 Y 0856 |
| 11 Y 0566 | 25 Y 0469 |
| 29 Y 0018 | 32 Y 0283 |
| 33 Y 0016 | 07 Z 6256 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

---

## அ.தி.மு.க.வில் சேர்ந்தார்

மதுரை, மே 15

தி.மு.க.வின் மதுரைக் கிளைத் தலைவர் திரு. பழக்கடை காளி தி.மு.க.விலிருந்து வெளியேறி அ.தி.மு.க.வில் சேர்ந்துள்ளார்.

உண்மையான பல தியாகங்களைப் புரிந்து கொண்டவர்களை தி.மு.க. புறக்கணித்துவிட்டதே தமது வெளியேற்றத்திற்குக் காரணம் என்று அவர் கூறியுள்ளார். (இ)

---

## சமாதான நீதவான்

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் நீதி நிர்வாக எல்லைக்குள் சட்டத்தரணி எஸ் சண்முகராசா சமாதான நீதவானாகவும், உத்தியோகப் பற்றற்ற நீதவானாகவும் நீதியமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இனிநொச்சி பகுதிக்குத் திரு வி. ரி சுந்தரலிங்கம் நீதியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் நாசவேலைகளை ஏற்படுத்த 96 அமெரிக்கர் இரகசிய ஊடுருவல்!

## ஈரான் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா மறுப்பு

தெஹ்ரான், மே 15

ஈரானில் நாசவேலைகளை ஏற்படுத்தி அரசுக்கு எதிராக ஆயுதப்படைகளை தூண்டி விடும் முயற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு அமெரிக்கா 96 பேர் அடங்கிய சில குழுக்களை ஈரானுக்குள் இரகசியமாக அனுப்பிவைத்துள்ளது.

இத் தகவலை ஈரான் ஜனாதிபதி ஜனப் பானி சதார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து தொலைபேசி மூலம் இச் செய்தி மக்களுக்குக் கிடைத்துள்ளதாகவும் ஜனப் சதார் தெரிவித்துள்ளார்.

ஈரானிய ஆயுதப்படைகளின் விசுவாசத்தில அரசுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி ஆங்காங்கே அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் எடுபடும்பொருட்டே இக் குழுவினர் ஈரானுக்குள் அனுப்பப்பட்டனர் என்றும் தெரிவித்த ஜனாதிபதி — அமெரிக்காவில் நீண்ட காலம் வசித்துவரும் 19 ஈரானியர்களின் தலைமையிலேயே இக் குழுக்கள் ஈரானுக்குள் அனுப்பப்பட்டன என்றும் கூறினார்.

ஈரானின் பக்தியார் ஜனசந்தடியற்ற மலைப்பிரதேசத்தில் இரண்டு அமெரிக்க ஹெலிகொப்டர்கள் ஆயுதங்களை இறக்கியுள்ளனஎன்றும் அவர் கூறினார்.

ஈரானிய ஜனாதிபதியின் இக் குற்றச்சாட்டை அமெரிக்க வெளியுறவு அமைச்சு மறுத்துள்ளது. (இ)

# எகிப்தில் 66 ஆண்டு கால இராணுவச்சட்டம் ரத்து!

கெய்ரோ, மே 15

எகிப்தில் 66 ஆண்டுகளாக இருந்துவந்த இராணுவச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது

எகிப்திய ஜனாதிபதி ஜனப் அன்வர் சதாத் நேற்று ஆட்சிமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அதிபர் சதாத் ஆட்சி மன்றத்தில் எகிப்திய அரசின் புதிய கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்'

ஜனநாயக கோட்பாடுகளை மேலும் தீவிரமாக கடைப்பிடிக்கும் நோக்குடனேயே இராணுவச்சட்டம் நீக்கப்படுவதாகவும் அதிபர் சதாத் தெரிவித்துள்ளார்.

1914ம் ஆண்டு பிரிட்டிஷ் தளபதி ஒருவர் எகிப்தில் கடமையாற்றியபோது இந்த இராணுவச்சட்டத்தை அமுலாக்கி கொண்டுவந்தார்.

எகிப்திய அதிபர் ஆட்சி மன்றத்தில் கொள்கை உரை நிகழ்த்துவதற்குமுன்னர் நேற்றுக்காலை ஆறு மணிக்கு (அமெரிக்க நேரம்) வெள்ளை மாளிகையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்கஅதிபர் திரு. ஜிம்மிகார்ட்டருடன் நீண்டநேரமாகத் தொலைபேசியில் கதைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### சவூதி எண்ணெய்விலை அதிகரிப்பு

றியாத், மே 15

சவூதி அரேபியா எண்ணெயின் விலையை அதிகரித்துள்ளது.

பீப்பா ஒன்று 2 டாலர் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பின் பின்னும் ஏனைய எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகளைவிட சவூதிஅரேபிய எண்ணெயின் விலை மிகக் குறைவானதே.

சவூதிஅரேபிய எண்ணெயின் புதிய விலை ஒரு பீப்பா 28 டாலராகும். (இ)

### தட்சர் அரசுக்குஎதிரான வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு இல்லை

லண்டன், மே 15

பிரிட்டனில் திருமதி மார்கிரட் தட்சர் அரசின் பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக ஒரு அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளுமாறு ஒரு கோடி 20 லட்சம் தொழிலாளருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை பெருந்தொகையான தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(7ம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பில் மோசடி இடம்பெற்றுள்ளது

### நேபாள எதிர்க்கட்சிகள் கண்டனம்

காட்மண்டு, மே 15

பல கட்சி அரசியல் முறையை புதிதாக அமுலுக்குக் கொண்டு வருவதா பஞ்சாயத் தேர்தல் முறையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதா என்பது குறித்து பொது மக்களின் கருத்தை ஆராயும் பொருட்டு நேபாளத்தில் இடம்பெற்ற சர்வஜனவாக்கெடுப்பில் பல மோசடிகள் கையாளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன

வாக்குச்சீட்டுக்களிலேயே பல மோசடிகள் ஏற்பட்டுள்ளதாக பஞ்சாயத்து நிர்வாக முறையை எதிர்க்கும் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இங்கு நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின்போது 54 79 வீதமானோர் பஞ்சாயத்து முறைக்கு ஆதரவாகவும் 45 21 வீதமானோர் பல கட்சி ஆட்சி முறையை ஆதரித்தும் வாக்களித்திருந்தனர்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் நேபாள மன்னர் மகேந்திரா அரசியல் கட்சிகளுக்குத் தடை விதித்ததோடு 1 வது பாராளுமன்றம் கூடிய சில மாதங்களுக்குள்ளாகவே ஆட்சிமன்றத்தையும் கலைத்தார். (இ)

# "ஜனதா ஆட்சியில் தயான் இந்தியா வந்தது உண்மையே"

### வாஜ்பாயின் மறுப்பைக் கண்டிக்கிறார் சுப்பிரமணியசுவாமி

புதுடில்லி, மே 15

ஜனதா ஆட்சிக்காலத்தில் இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷே தயான் இந்தியாவுக்கு வந்து திரும்பியது உண்மையே.

இவ்வாறு ஜனதா ஜே பி பிரிவு பொதுச்செயலாளர் திரு. சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

ஜெனரல் மோஷே தயான் இந்தியாவுக்கு வரவில்லை என்று அப்போதைய வெளிநாட்டமைச்சரும் தற்போதைய பாரதீய ஜனதாக் கட்சித் தலைவருமான திரு ஏ பி வாஜ்பாஜ் கூறுவது முற்றிலும் தவறானது என்றும் அன்றைய அரசில் அங்கம் வகித்த அவர் அதனை மறுத்துக் கூறுவது பொருத்தமானதல்ல என்றும் திரு. சுவாமி கூறினார். (இ)

### வண். வடகிழக்கு ச. ச. நிலைய முத்தமிழ் விழா

(யாழ்ப்பாண

யாழ்ப்பாணம் வண். வடகிழக்கு சனசமூக நிலைய 30 வது ஆண்டு விழாவை இம் மாதம் 29ம், 30ம் திகதிகளில் முத்தமிழ் விழாவாகக் கொண்டாடவிருக்கின்றது.

இவ் விழாவில் ஆண்களுக்கான 5மைல் மரதன் ஓட்டமும், 15மைல் சைக்கிள் ஓட்டமும், பெண்களுக்கான 5 மைல் ஓட்டமும் மற்றும் விநோத உடைப் போட்டியும் விவாதமேடை, கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (ஈ)

### பெண்ணுக்கு ரூ 1500 அபராதம்!

(பண்டத்தரிப்பு)

சட்டவிரோதமான முறையில் தமது வீட்டில் 15 போத்தல் வடிசாராயத்தை வைத்திருந்ததாக சங்கானைப் பொலிசாரினால் குற்றம் சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சங்கானையைச் சேர்ந்த மகேஸ்வரிக்கு நீதிபதி ஆயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் விதித்தார்.

இனிமேல் இதுபோன்ற குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று பிரஸ்தாப பெண்ணுக்கு நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.


BAYER
ஒரு ப்பாயர் உற்பத்தி




# பேபோலான்

தாவரம் செழித்து வளரச் செய்யும் தழைத் தெளிபொருள்.

தாவரப் போஷாக்கு பற்றுக்குறைக்கு விரைவில் குணம் காண பேபோலான் தெளியுங்கள். பழ விருட்சங்கள், காய்க்கறிக் கன்றுகள், அலங்காரத் தாவரங்களுக்குச் செழிப்பூட்டும் போஷாக்கு உணவு அது.

பேபோலான் உன்னத முறையில் தயாரிக்கப்பட்டது. (நைட்ரஜன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய போஷாக்கு நலச் சத்துகளை 11 : 8 : 6 என்ற வீத அளவிலும், இரும்பு, செம்பு, மங்கனீஸ், பொரோன், துத்தநாகம், மொலிப்டெனம், கோபால்ட் சத்துகள் போதிய அளவில் கொண்டது.) பேபோலான் இலைகள் மூலம் செறிவடைவதால் விரைவில் பலன் அழிக்கும்.

"ப்பாயர்" - ஜெர்மனி தயாரிப்பு

இலங்கையில் அடைத்து வழங்குவோர்:

**ஹேகெம் லிமிடெட்** 50, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு - 10

பயிர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு "ப்பாயர்"



MelAds

200 மில்லிலிட்டர் ரூபா 10/- 500 மில்லி லீட்டர் ரூபா 22/50 4·5 லீட்டர் ரூபா 160/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாந்திபேதி நோய் எதிரொலி:

# கிணறுகளில் 'குளோறின்' கலக்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

நாட்டின் பல பகுதிகளில் வாந்திபேதி நோய் பரவி வருவதால் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க, தனியார் கிணறுகளுக்கும் தண்ணீர்த் தாங்கிகளுக்கும் "குளோறின்" மருந்துகலந்து விடுவதற்குடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி டாக்டர் சி. விஜயராஜா யாழ் மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள அவசர சுற்றறிக்கையொன்றில் கேட்டுள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன அவ்வப்பகுதி சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் தமது பகுதியிலுள்ள பொதுக் கிணறுகளுக்கு "குளோறின்" மருந்து கலப்பதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் பிரதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாநகரசபை முதல்வர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 3-ம் திகதி

(16 5 80) வெள்ளிக்கிழமை

மேடம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடல்நலம் பாதிக்கப்படலாம், வீண் பொருள்களினால் பணம் விரயமாகலாம், அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

இடபம்: சுருடப்பார்வை உங்களை வட்டமிடும், பிறரின் தலையீடு வேதனையைத் தரலாம், மோசடி ஒன்றில் உங்களை மாட்டி வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம், உஷார் நிலையில் இருப்பது விரும்பத்தக்கது.

மிதுனம்: வாழ்க்கை சுவையாக இனிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்தும் கிடைக்கக்கூடும், புதிய துறைகளின் மூலம் பொருளைத்தேடுவீர்கள், உடல்நலத்திலும் நல்ல முன்னேற்றமுண்டு.

கடகம்; துன்பத்தின் ரேகைகள் படரும், தூக்கம் கெடும், எதிர்பார்த்ததில் தடை ஏற்படும், மனதில் ஆத்திரம் அலைமோதும். வாகன சாரதிகள் நிதானத்துடன் இருக்கவும்.

சிங்கம்; வாகன சுகத்துடன் வாழ்க்கைநலன் வந்து சேரும், தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

கன்னி: இலக்கிய இரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும், எழுத்தாளர்களுக்குப் புதிய படைப்புக்கான கரு கிடைக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் நற்புகழ் உண்டு. பொன்னான தினம்.

துலாம்: பக்கத்தில் படுகுழி தோண்டுவதற்குப் பகைவர்கள் காத்திருப்பர், முகஸ்துதி பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், ஆயுதபீடைக்கு இடமுண்டு, கவனம் வேண்டும்.

விருச்சிகம்: இனிமையான அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல்கலைக் கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும் கலாஸ்திர வழியால் கண்ணியம் சேரும்.

தனுசு: தொழில்துறையில் நஷ்டத்துக்கு இடமுண்டு. புதிய முதலீட்டினை ஒத்தி வைக்கவும், நண்பரின் கடிதம் வேதனையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

மகரம்: கவர்ச்சிகரமான தினம், சிலவிடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள், இல்லத்தில் இடம்பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அடக்கம் நன்று.

கும்பம்: செய்தொழிலால் [illegible] களும் இடம்பெறும், பொறி[illegible]

...யியலாளர்களுக்கு சிறப்பான தினம், சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கும், தொடர்புகளிலும் திருப்தியுண்டு.

மீனம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறலும், விருந்துபசாரங்களும் உண்டு, சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

சோதிடம் கலாநிதி

திருமதி

க. வேலுப்பிள்ளை.

## இன்று நடைபெறும் உதைபந்தாட்ட 'மோதல்'

### ஜே. ஐ. குடியரசுத்தூதுவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச் சங்கம் யாழ் கிளை யாழ். உதைபந்தாட்ட கழகத்தினருடன் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டப்போட்டி, இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.

இந்தப்போட்டியில் பிரதம விருந்தினர்களாக இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதுவர் புறூனோ தம்பதிகள் கலந்து கொள்வர்.

இன்றைய உதைபந்தாட்ட மோதலில், நாவாந்துறை சென் மேரீஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகமும் இடம்பெறுகின்றன.

# தனயன் கொலை:

## தந்தைக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

மகனுக்கு நஞ்சூட்டிக் கொலை செய்ததாக கைதான தந்தை இம்மாதம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டு அவர் மகனுக்குப் பருக்கியதாகக் கூறப்படும் நஞ்சின் மிகுதிப் பகுதி கொழும்பு இரசாயனப் பரிசோதனைப்பிரிவுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த பிரான்பற்று என்னுமிடத்தைச் சேர்ந்த செல்லத்துரை பொன்னுச்சாமி என்னும் நபர் தமது மனைவியுடன் மதுபோதையில் சண்டையிட்டபோது மனைவி இரு பிள்ளைகளுடன் வீட்டை விட்டுச் சென்றுவிட தம்முடனிருந்த 5 வயதுப் பாலகனான லோகநாதன் என்னும் தமது மகனுக்கு அவர் நஞ்சூட்டியதையடுத்து அப்பாலகன் மரணமானதாக இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து மேற்படி தந்தையை சண்டிலிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம் எச். பி. பெர்னாண்டோ கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார். அச்சமயம் அவரை இம்மாதம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி சி. ஆர் இராசிங்கம் உத்தரவிட்டு மேற்படி நபர் தமது குழந்தைக்குப் பருக்கியதாக கூறப்படும் நஞ்சின் மிகுதியை பரிசோதனைக்காக கொழும்பு இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்புமாறும் உத்தரவிட்டார். (இ)

## சகோதரர்கள் இருவர் சாம்பியனாகினர்

(யாழ்ப்பாணம்)

இல்ல விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய சகோதரர்கள் இருவர் தாம் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினரின் நான்காவது இல்ல விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய ஸ்ரீகுகன், ஸ்ரீசுயந்து ஆகிய சகோதரர்கள் ஆரம்பப்பிரிவில் பங்குபற்றிச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கேடயங்களைப் பெற்றதுடன் சகலரதும் பாராட்டுதல்களையும் பெற்றனர்.

மகாவித்தியாலய மாணவர்களான இருவரும் அண்மையில் நடைபெற்ற பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் சாம்பியன் வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக் கொண்டனர். என்பதும் கடந்த வருடங்களில் யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிச் சாம்பியன் கேடயங்களைப் பெற்று, அகில இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் குப்பிளான் பகுதியைச் சேர்ந்த பிரபல விளையாட்டு வீரரும், அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் குழுவைச் சேர்ந்தவருமாகிய திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தன், இராமநாதன் கல்லூரியின் முன்னைய ஆசிரியை திருமதி கருணாநிதி ஸ்ரீகாந்தன் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரர்களாவர்

(சொரு

வேலை...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

130 இடங்களில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெற்ற போதிலும் மிகக் குறைந்தளவிலான தொழிலாளர்களே இவற்றில் கலந்து கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்
(புதிய பிரதி)

ஹரன் [illegible]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—பிரமிளா
அன்புச் சகோதரர்கள்
(புதிய பிரதி)

[illegible] (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி—பிரபா
பாலாடை
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
[illegible]-V. R. [illegible]
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
திருடன்
(புதிய பிரதி)

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ROY SCHEIDER (THE SEVEN UPS)...
DUSTIN HOFFMAN......in
'MARATHON MAN'
—A THRILLER — COLOR—
Next Attraction "Sharks' Treasure"
(color)

வெற்றிகரமான 8 வது வாரம்
தொலைபேசி: 46
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணஓவியம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
குமுதம்

[illegible] (யாழ்நகர்) போன்: 1898
தினசரி 4 காட்சிகள்
மரகதம் (புதிய பிரதி)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 5 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
BLESS THIS HOUSE
(Color)

ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
கமலஹாசன் (இருவேடங்களில்)
ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...



டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் லேல்மாடி -
254/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## ஏயர் லங்காவிற்கு மேலும் இரண்டு விமானங்கள்

(கொழும்பு)

ஏயர்லங்கா நிறுவனம் மேலும் இரண்டு 707 போயிங் விமானங்களை வாங்குவதற்கு 440 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ம.கு)

மாணவர்களுக்கான
தமிழ் பயிற்சி
3-ஆம் வகுப்பு பயிற்சிவழித் தமிழ் 1-50
6-ஆம் „ தமிழ்மொழிப்பயிற்சி 4-85
7-ஆம் „ தமிழ் (புதுமுறை மாதிரி) 4-00
9-ஆம் „ தமிழ் மொழி பகுதி I—II 4-50
அரிவரி-வண்ணத் தமிழ் (கலர் படங்களுடன்) 2-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

"வடபகுதி எம். பிக்கள்

# அரசுடன் ஒத்துழைத்தால் வடக்கு அபிவிருத்தியுறும்"

## நெடுந்தீவு வரவேற்பில் பிரதி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"வடபகுதி எம். பிக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் ஏனைய பகுதிகளைப் போல வடபகுதியும் அபிவிருத்தி அடைந்திருக்கும்"

இவ்வாறு பிரதி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா நெடுந்தீவு மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

பதில் நெடுந்தீவு கிராமசபை அதிபர் திரு. ஆ. குணரத்தினம் தலைமையில் கிராம மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"அபிவிருத்தி வேலைகளுக்காக ஒவ்வொன்றும் நாங்கள் செயல்படுகிறோம். எமது அரசை நம்பி இந்த நாட்டின் அபிவிருத்திக்காக வேண்டிய பணத்தைத் தாராளமாக வழங்கி வருகிறது. அரசாங்கத்தில் வடபகுதியையும் அபிவிருத்தி அடையச் செய்யவே நாம் விரும்புகிறோம். அதற்கு தமிழ் மக்கள் அரசுக்கு விசுவாசமாக நடக்கவேண்டும்.

வடபகுதி எம். பிக்கள் தீவுப்பகுதி மக்களின் பிரச்சினைகளைப் பற்றி எதுவித அக்கறையும் எடுத்துக் கருதவில்லை. அதனால்தான் உங்களின் பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாது இருந்து வருகிறது.

எமது அரசில் 3 தமிழ் அமைச்சர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படுகிறார்கள். அதேபோல் வடபகுதி எம். பிக்களும் அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வரவேண்டும்.

### மாவட்ட மந்திரி பேச்சு

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் பேசுகையில்:

கிழக்கு மாகாண எம். பிக்கள் எம்முடன் சேரமுடியுமென்றால் வடபகுதி எம் பிக்கள் ஏன் எம்முடன் ஒன்றாக சேரமுடியாது? வடபகுதி எம். பிக்கள் எம்முடன் சேர்ந்து ஒத்துழைத்தால் உங்களின் தேவைகள் யாவற்றையும் அரசு தீர்த்துவைக்கும் என்றார். (கொ-கு)

## பிரதியமைச்சருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள நெடுஞ்சாலைகள் திணைக்கள அலுவலகத்திற்கு விஜயம்செய்த நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திராவை மேற்படி அலுவலகதலைமைப்பொறியியலாளர் திரு. சி. சண்முகநாதன் மாலை அணிந்து வரவேற்றார்.

பிரதியமைச்சருடன் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், நெடுஞ்சாலைகள் திணைக்கள தலைமைப் பொறியியலாளர் திரு. எஸ். குணேசரத்தினம், மாவட்ட அமைச்சரின் பத்திரிகைச் செயலாளர் திரு. இ. கதிரவேலு ஆகியோரும் சென்றனர்.

இவர்களை வரவேற்ற பொறியியலாளர் அலுவலக ஊழியர்களை பிரதியமைச்சருக்கு ஏனையோருக்கும் அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் சகலருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. அங்கிருந்து பிரதியமைச்சரும் ஏனையோரும் கஜமுனை கடற்கரைக்குச் சென்று பார்வையிட்டனர். (கொ)

'இயேசு கிறீஸ்து ஜீவிக்கிறார்'
ஆத்ம சரீர சுகமளிக்கும் அற்புத உயிர் மீட்சிக் கூட்டங்கள்
இடம்: யாழ் திறந்தவெளி அரங்கு மைதானம்
நேரம்: தினமும் மாலை 5-30 மணிக்கு
காலம்: மே 19 முதல் 25 வரை 1980
ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் வல்லமையை வந்து பாருங்கள்.
✶ குருடர் காண்கிறார்கள்
✶ செவிடர் கேட்கிறார்கள்
✶ சப்பாணிகள் நடக்கிறார்கள்
நற்செய்தி அளிப்பவர்:
சங். M. பெர்னாண்டோ
யாவும் இலவசம்! யாவரும் வருக!!
5664

## சிவகுமாரன் சிலை

[யாழ்ப்பாணம்]

சிதைந்த நிலையிலுள்ள இசூர் மாணவன் சிவகுமாரனின் சிலையை உரும்பராய் இளைஞர்கள் புனருத்தாரணம் செய்து அடுத்த மாதம் 5ம் திகதி அவரின் நினைவு தினத்தைச் சிறப்புடன் நடாத்த முடிவு செய்துள்ளனர்.

## ஜே. ஐ. குடியரசு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

அரச சந்திப்பார். திரு. எஸ். தியாகராசா (எம். எம். சி) இல்லத்தில் நடைபெறும் பகல் போசன விருந்தில் கலந்து கொள்வார்.

மாலை 5-00 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பாசிச எதிர்ப்பு தின விழாவில் கலந்துகொள்வார்.

## வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7 ஆண்டுகளாக வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அதிபதிராக கடமையாற்றிய திரு. ஏ. நடராசா இம்மாதம் முதலாம் திகதி முதல் இளைப்பாறியுள்ளார்.

உப அதிபர் திரு. எஸ் கந்தப்பிள்ளை உப அதிபராக 9 ஆண்டுகளும் ஆசிரிய சேவையில் இக்கல்லூரியில் தொடர்ச்சியாக 33 ஆண்டுகள்சேவையாற்றிய பின் இம்மாதமுடிவில் இளைப்பாறவுள்ளார்.

திரு. எஸ். பி பாலசுப்பிரமணியம் தற்பொழுது அதிபராகவும் திரு எஸ் பன்னீர்ச்செல்வம் உப அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் இக்கல்லூரியில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிரேஷ்ட ஆசிரியர்களாக கடமையாற்றியவர்கள்

தேவை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்து இரண்டு மைல் சுற்றுடலில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு தேவை. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5783 யாழ்ப்பாணம். 5783

## தொழில் நுட்பப் பிரிவு

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள தேவரையாளி இந்துக் கல்லூரியின் தொழில் நுட்பப் பிரிவிற்கு தனியான கட்டிடமொன்று அமைக்கப்படவுள்ளது. இக்கட்டிடம் அமைப்பதற்கான காணி சுமார் 40,000 ரூபா செலவில் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இக்காணியைப் பெறுவதற்கான நிதியினை உடுப்பிட்டி எம். பி. திரு. ரி இராசலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார். [ச]

## புங்குடுதீவு சரவணை குடிநீர் விநியோகம் ஆரம்பம்

(வேலணை)

புங்குடுதீவு, சரவணை ஆகிய கிராமங்களுக்கு ஒரு நாளைக்கு 50 ஆயிரம் கலன் குடிநீரை சமூகசேவைப்பகுதியினர் வழங்கி வருகின்றனர்.

கடந்த ஒரு மாத காலமாக குடிநீர் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டதினால் இவ்வூர் வாசிகள் குடிநீர் இல்லாத பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வந்தனர் (கொ)

## மிளகாய்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டன் சரியாகக் காயாத மிளகாயையும் சேர்த்து ரூ 10-10 சதம் விலைகுறித்து மேலிடத்திற்கு அனுப்பிவைக்கின்றனராம்.

திணைக்களத்திலுள்ள ஒரு சில ஊழியர்களின் ஏமாற்று வித்தைகளாலும், மோசடிகளாலும் பொதுமக்களும் அரசாங்கமும் பாதிப்புக்குள்ளாவதாகவும் அரசாங்க அதிபருக்கு முறையிடப்பட்டுள்ளது.

மோசடியில் ஈடுபட்டவர்களையும், ஏமாற்றுக்காரர்களையும் கண்டுபிடித்துத் தண்டனை வழங்குவதற்கான முயற்சிகளை யாழ் அரசாங்க அதிபர் மேற்கொண்டுவருகிறார் (கொ-கு)

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிடெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், மற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!

மரண அறிவித்தல்
திருமதி கமலாம்பாள் சதாசிவம் செட்டியார்
யாழ்ப்பாணம் பெரியகடை திருமதி கமலாம்பாள் சதாசிவம் செட்டியார் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற சதாசிவம் செட்டியாரின் அருமை மனைவியும் முருகானந்தன் (கைஸ்-வே நியூஸ் ஏஜன்ட்ஸ்) குணநிதி, பதுமநாதன், பகீரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகநாதன், முருகானந்தம் (ஸ்ரீமுருகன் மில்ஸ், பேலியகொட) ராகினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24/1, பெரியகடை இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக 16-5-80 வெள்ளிக்கிழமை (இன்று) பி. ப 2 மணிக்கு வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.
5784

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under No CE/8948/ 78. The Eelanaadu, Post Box No 49, Telegram "Eelanaadu, Phone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org